## கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

### முதலாம் வருட/முதலாம் அரையாண்டுக் கலைமாணித் தேர்வு – 2012/2013 (ஜனவரி/பெப்ரவரி 2015) (மீள் பரீட்சை)

26 MAR 2015
EASTERN UNIVERSITY

### EDU 1101 கல்வியின் அடிப்படை எண்ணக்கரு
### Basic concept of Education

நேரம் : 02 மணித்தியாலங்கள்

**பகுதி - I இல் இருந்து இரு வினாக்களையும் பகுதி - II இல் இருந்து ஒரு வினாவையும் தெரிவுசெய்து மொத்தமாக மூன்று வினாக்களுக்கு மட்டும் விடை தருக.**

---

## பகுதி – I

01.(அ) கல்வி பற்றிய அடிப்படைக்கருத்துக்களை முன்வைத்த மேலைத்தேச சிந்தனையாளர்களில் ஜோண்டுயி, ரூசோ, பிளேற்றோ முக்கியமானவர்களாவர். இவர்கள் கூறிய கருத்துக்களை அடிப்படையாக வைத்து ஆராய்க.

(14 புள்ளிகள்)

(ஆ) பொருத்தமான நடத்தைமாற்றத்தை ஏற்படுத்துவதில் கல்வியின் செயற்பாடு அத்தியாவசியமாகும். தனியார் கண்ணோட்டத்தில் கல்விமூலம் நிறைவேற்றப்பட வேண்டிய பின்வரும் செயற்பாடுகளை விளக்குக.

(i) சமமான ஆளுமை விருத்தி

(ii) சமூகமயமாக்கல்

(iii) வாழ்வதற்குக் கற்றல்

(iv) சமாதானத்திற்கான கல்வி

(16 புள்ளிகள்)

02.(அ) தொழில் வாண்மையில் கற்பித்தலானது ஒரு உயர்ந்த ஸ்தானத்தில் இருப்பதுடன் உயர்தொழில் என பலராலும் கருதப்படுகின்றது. இதற்கு ஆசிரியர் உயர் தொழிற்றிறனை பெற்றிருக்க வேண்டியது அவசியமாகும். இதற்கு ஆதாரமான காரணங்களை முன்வைத்து விளக்குக.

(14 புள்ளிகள்)

(ஆ) இன்றைய ஆசிரியர்கள் தமது தொழிலுக்குரிய உயர் பண்புகளைக்கொண்டு தமது அன்றாட கடமைகளை நிறைவேற்றுகின்றார்களா என்பதை விமர்சன ரீதியாக ஆராய்க.

(16 புள்ளிகள்)

03. கல்வியில் பின்வரும் எண்ணக்கருக்களை சுருக்கமாக விளக்குக.

(அ) அனைவருக்கும் கல்வி.

(ஆ) யுனெஸ்கோவின் அறிக்கையிலுள்ள கல்வியின் நான்கு தூண்கள்.

(இ) கல்வி முறைமைகள்

(ஈ) வகுப்பறைச் செயற்பாட்டின் உள்ளீடுகள்

(உ) 1997/98 இல் அறிமுகப்படுத்தப்பட்ட கல்வி சீர்திருத்தத்தில் இடைநிலைக்கல்வியில் ஏற்பட்ட மாற்றம்.

(5x6=30 புள்ளிகள்)

## பகுதி – II

04. (அ) "கல்வியில் இலட்சியவாதத்தின்மூலம் மாணவர்களின் சரியான எதிர்பார்பினை பெறமுடியும்." இக்கூற்றின் அடிப்படையில் இலட்சியவாதத்தின் செல்வாக்கினை ஆராய்க.

(20 புள்ளிகள்)

(ஆ) "ஒரு பிள்ளை எவ்வளவு பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றதோ அதற்கேற்பவே அவற்றைத் தீர்க்கும் ஆற்றலை வளர்த்துக்கொள்ளும். இதன்மூலமே சிறந்த நடத்தை மாற்றத்தையும் ஏற்படுத்தும்." ஜோண்டுயின் இக்கருத்து இன்றைய கல்வி முறைமையில் ஏற்படுத்தும் தாக்கத்தினை ஆராய்க.

(20 புள்ளிகள்)

05.(அ) வகுப்பறை மட்ட வினைத்திறனை கற்பித்தலின்மூலம் அடையப்படும் விஷேட குறிக்கோள் நாட்டின் தேசிய இலச்சினை அடைவதில் முக்கியத்துவம் பெறுகின்றது. கலைத்திட்ட இலக்கு, பாடசாலை இலக்கு ஆகியவற்றினூடாக இது அடையப்படும் விதம் பற்றி உமது கருத்துக்களை முன்வைத்து விளக்குக.

(20 புள்ளிகள்)

(ஆ) இலங்கையின் கல்விக்கொள்கை உருவாக்கத்தில் மதசார்பின்மையின் பண்புகள் எவ்வளவிற்கு முக்கியத்துவப்படுத்தப்படுகின்றன என்பதை ஆராய்க.

(20 புள்ளிகள்)

***